**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.154/2016** **P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சத்தியப்பிரியா | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை 26.07.2023**

நான் இந்த வழக்கில் முதல் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். 1 முதல் 6 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்

1. முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.1.
2. பிரேத பரிசோதனை அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.2.
3. இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.3.
4. வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.4.
5. முதல் மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.5.
6. 2வது மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.6.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>4வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். அந்த கார் யாருடையது என்றால் எங்களுடையது தான். காரை என் கணவர் தான் ஓட்டி சென்றாரா என்றால் ஆமாம். நாங்கள் சென்ற காரின் மீது என்ன வாகனம் மோதியது என்றால் லாரி மோதியது. லாரியின் உரிமையாளர் தான்

இந்த மனுவில் முதல் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் வாகனம் எங்களுடைய காரில் எந்த பக்கமாக மோதியது என்றால் எங்கள் காரின் முன்பக்கமாக மோதியது. எங்கள் காரும் முதல் எதிர்மனுதாரர் வாகனமும் ஒரே திசையில் தான் பயணம் செய்ததா என்றால் ஆமாம். என் மனுவில் 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய என் கணவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும், முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து குறித்து புகார் ஒரு நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், விபத்து இரவு 12.00 மணிக்கு நடந்ததால் மறுநாள் புகார் கொடுத்தோம். குற்றச்சாட்டு முதல் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீதா அல்லது 3வது எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீதா என்றால் முதல் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது தான் குற்றச்சாட்டு சொல்லப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையை தவிர்த்து இறுதி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறுதியாக யாரை குற்றவாளியாக போலீசார் முடிவு செய்தார்கள் என்று தெரியுமா என்றால் லாரியின் ஓட்டுநரை தான் குற்றவாளியாக முடிவு செய்தார்கள். லாரியின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறாகும். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே ஒரு மகன். என் மகனின் இரண்டாவது பிறந்த நாள் அன்று விபத்து ஏற்பட்டது. நான் மனுவில் 3 மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் மீது எந்த நஷ்ஈடும் கேட்கவில்லை என்றால் சரிதான். 3 மற்றும் 4வது எதிர்மனுதாரர்களை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் இல்லை. எனக்கு ஒரு மகனை தவிர்த்து வேறு பிள்ளைகள் இல்லை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஒரே மகன் தான்.

<u>**மறு விசாரணை**</u> இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.154/2016 P.W.2**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | தொழில் | |
| த.பெ. | | மதம் | |
| கிராமம் | | சாதி | |
| வயது | | வட்டம் | |

**முதல் விசாரணை 04.10.2023**

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். ஆவணங்கள் குறியீடு இல்லை.

**4வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்தில் ஜனங்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் போய் நான் என்னவென்று விசாரித்தேன் என்றால் விசாரித்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். விபத்தை நேரடியாக பார்த்தபிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. விபத்து யாருடைய தவறினால் ஏற்பட்டது என்றால் லாரி ஓட்டுனரால்தான் விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து சம்பந்தமாக இது வரை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் என்னை விசாரிக்கவில்லை. விபத்தில் இறந்த நபர்களின் விவரம் தெரியுமா என்றால் 3 பெண்கள், ஒரு குழந்தை மற்றும் ஒரு ஆண் இறந்து விட்டார்கள். அவர்களின் பெயர், விலாசம் தெரியுமா என்றால் டொயோட்டா காரை ஓட்டிய நபரின் பெயர் விஜயகுமார். லாரி ஓட்டுநரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து லாரியின் தவறுதலால் நடந்தது என்பதால் லாரியின்

ஓட்டுநரின் பெயரை தெரிந்து கொண்டேனா என்றால் லாரி ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. நான் யார் சொல்லி நீதிமன்றத்த4ிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் கண்ணையன் என்பவர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கண்ணையன் போன் செய்த பிறகு தான் அவர் கண்ணையன் என்பது தெரியவந்தது என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.154/2016** **R.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரேசன் | தொழில் | |
| த.பெ. | | மதம் | |
| கிராமம் | | சாதி | |
| வயது | | வட்டம் | |

**முதல் விசாரணை 13.12.2023**

நான் இந்த வழக்கில் 4வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Legal Executive Manager ஆக பணிபுரிகிறேன். நான் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 3 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. எ.ம.சா.ஆ.1 - சுங்குவார்சத்திரம் காவல் ஆய்வாளர் ஸ்ரீபெரும்புத்தூர் வட்டார போக்குவரத்து அதிகாரிக்கு முதல் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் உரிமத்தை ரத்து செய்ய கொடுக்கப்பட்ட கடிதம். அக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து வருவதாக மேற்படி வட்டார போக்குவரத்து ஆய்வாளர் கொடுக்கப்பட்ட கடிதம் ஜெராக்ஸ் நகல்.

2. எ.ம.சா.ஆ.2 - 3ம் எதிர்மனுதாரர் வாகனம் 4ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்த காப்பீட்டின் ஜெராக்ஸ் நகல்.

3. எ.ம.சா.ஆ.3 - 4ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு மோட்டா வாகன சட்டபிரிவு 134(3)ன் கீழ் விபத்து குறித்த விவரங்களை கேட்டு ஓட்டுநர் விவரம், ஓட்டுநர் உரிமம், பாலிசி நகல் போன்றவற்றை கேட்டு அனுப்பப்பட்ட கடிதம் ஜெராக்ஸ் நகல்.

(எம.சா.ஆ.1 ஆவணம் ஜெராக்ஸ் நகல் என்பதால் மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுகிறேன்.

<u>**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனக்கு இந்த விபத்து குறித்து நேரடியாக தெரியாது என்றும், ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு குறித்து எங்கள் அலுவலகத்தில் தனிநபர் புலனாய்வு அதிகாரி நியமித்து புலன் விசாரணை மேற்கொண்டோமா என்றால் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளோம். தனிநபர் புலன் விசாரண அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. எ.ம.சா.ஆ.1ல் சுங்குவார்சத்திரம் காவல் ஆய்வாளர் ஸ்ரீபெரும்பத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டியதால் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்யுமாறு கேட்டுள்ளார் என்றும், குடித்துவிட்டு ஓட்டியதால் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்யுமாறு கேட்கவில்லை என்றால் அவர் குடித்துவிட்டு ஓட்டியதால் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்யுமாறு கேட்கவில்லை, ஆனால் மோட்டார் வாகன ஆய்வாளர் நடவடிக்கை எடுத்ததில் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீபெரும்பத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் முதல் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு அனுப்பிய கடிதமானது ஒரு format-ல் உள்ளது என்றால் சரிதான். ஸ்ரீபெரும்பத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் முதல் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு அனுப்பிய கடிதத்தில் விளக்கம் கேட்டுதான் எழுதியுள்ளார் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டினார் என்று மருத்துவ அறிக்கையை பார்த்தால்தான் சொல்லமுடியும் என்று சொன்னால் சரியல்ல. விபத்து தேதியில் 3ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான காப்பீடு இருந்தது என்றால் காப்பீடு விதிகளுக்கு உட்பட்டிருந்தது. 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் விஜயகுமாருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் அவர் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் முதல் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம்

எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மனுதாரர்கள் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடமிருந்துதான் இழப்பீடு கேட்டுள்ளார்கள் என்றும், 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்களிடம் இழப்பீடு கோரவில்லை என்றும், வழக்கின் முடிவிற்காக அவசிய தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும் சொன்னால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும், நான் ஒட்டுநர் உரிமம் இல்லை என்று தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை